# களரி



மட்/ கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலய நாடக மன்றத்தின் செய்தி மடல்

அளிக்கை - 02 ஜீன் 2013


## 2011 – 2012 அரச சிறுவர் நாடக விழாவில் அரங்கேறிய கறுவாக்கேணி விக்னேஸ்வராவின் சிறுவர் நாடகங்கள்




### 2011 இல் முதலிடத்திற்கான ஏழு தேசிய விருதுகள், 2012 இல் சிறந்த நடிகருக்கான சிறப்புப் பரிசு

இலங்கை கலாசார அமைச்சும், இலங்கைக் கலைக் கழகமும்,தேசிய நாடக சபையும் இணைந்து வருடந் தோறும் அரச சிறுவர் நாடக விழாவினை கொழும்பு ஜோண் டி சில்வா கலையரங்கில் கோலாகலமாக நடத்தி வருகின்றன, இந்த நாடக விழாவில் 2011 தொடக்கம் சிங்களம், தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டு அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இந்நாடகங்கள் திறந்த பிரிவு ,வரையறுக்கப்பட்ட பிரிவு என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் நாடகங்கள் வரையறுக்கப்பட்ட பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முதலில் தொடர்பூடகங்கள் ஊடாக நாடக எழுத்துருக்கள் கோரப்படும் ,பின்னர் இதிலிருந்து நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்படும் எழுத்துருக்களின் ஆற்றுகைகள் மாவட்டம் அல்லது மாகாண அடிப்படையில் துறைபோர்ந்த நடுவர்களால் பார்வையிடப்பட்டு அதிலிருந்து தேசிய நாடக விழாவிற்குத் தகுதியான சிறுவர் நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய சிறுவர் நாடக விழாவில் அரங்கேற்றம் செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும் .தேசிய நாடக விழாவில் சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஒவ்வொரு நாடகங்கள் தினமும் மாலை வேளைகளில் அரங்கேற்றப்படும். இந்த நாடக விழாவில் கிழக்கு மாகாணத்திலிருந்து கல்குடா கல்வி வலயத்தின் கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தினுடைய சிறுவர் நாடகங்கள் 2011,2012 ஆகிய இரு வருடங்களிலும் தெரிவாகி அரங்கேற்றப்பட்டுள்ளன.

2011 இல் "இணைந்து வாழ..." எனும் சிறுவர் நாடகம் அரங்கேற்றப்பட்டதுடன் அவ் வருடத்தின் முதலாவது சிறந்த சிறுவர் நாடகமாகவும், வருடத்தின் சிறந்த சிறுவர் நாடக எழுத்துருவாகவும் ,சிறந்த நெறியாள்கையாகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த நடிகன், சிறந்த துணைநடிகை, சிறந்த ஒப்பனை, சிறந்த காட்சிய மைப்பு ,சிறந்த ஒளியமைப்பு என்பவற்றுக்கான தேசிய விருதுகளையும் இந்நாடகம் பெற்றுக் கொண்டது.

2012 இல் "கரிக்குருவியின் முயற்சி" எனும் சிறுவர் நாடகம் தெரிவாகி அரங்கேற்றப் பட்டிருந்தது. இதில் சிறந்த நடிகனுக்கான சிறப்புப் பரிசு இந்நாடகத்தில் அரசன் பாத்திரமேற்று நடித்த சிறிநுசன் எனும் மாணவனுக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்விரு சிறுவர் நாடகங்களும் நாடகமும் அரங்கக் கலைகளும் பாட ஆசிரியர் து.கௌரீஸ்வரன் அவர்களால் எழுதி நெறியாள்கை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.



# களரி அளிக்கை - 2

மட்/கது/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் நாடகமும் அரங்கக் கலைகளும் பாடத் துறையின் செய்தி மடலாகிய களரியின் இரண்டாவது இதழினை நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் வெளிக்கொணர்ந்துள்ளோம். களரியின் முதலாவது வெளியீட்டினை வரவேற்று கல்வி அதிகாரிகள் தொடக்கம் கலை இலக்கியகாரர்கள் வரை சமூகத்தின் பல தரப்பினரும் தொலைபேசி யூடாகவும் கடிதங்கள் மூலமும் வெகுவாகப் பாராட்டி உற்சாகம் வழங்கியிருந்தார்கள். இவர்கள் எல்லோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பாடசாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நாடக அரங்கச் செயற்பாடுகளைப் பற்றிய தகவல்களை உரிய காலத்தில் பதிவாக்கி ஆவணப்படுத்தும் நோக்குடனும், இச்செயற்பாடு களை வெளிச்சமூகத்தினருடன் பகிர்ந்து கொள்ளும் எண்ணத்துடனும், இதனூடாக மாணவர்களை ஆக்கபூர்வமான மனித ஆளுமைகளாக உருவாக்கும் இலட்சியத்துடனும் இச்செய்தி மடலினை வெளியிட்டு வருகின்றோம்.

ஒரு மனிதரின் ஆளுமை உருவாக்கத்தில் பாடசாலைகளின் பங்கு முக்கியமானதாக இருந்து வருகின்றது. இதிலும் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் நாடக அரங்கச் செயற்பாடுகள் ஒரு மாணவரின் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பினை வழங்கவல்லன. யாழ்ப்பாணப் பாடசாலைகளை மையமாக வைத்து 1980 களின் பின்னர் இலக்கிய கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களாலும் அவருடைய நாடக அரங்கக் கல்லூரி மாணவர்களாலும் மேற்கொள் ளப்பட்டு வந்த கல்வியியல் அரங்கச் செயற்பாடு களின் விளைவுகள் இதற்கான நேரடிச் சாட்சிகளாக உள்ளன.இன்று பிரதானப்படுத்தப்படும் 5E கற்பித்தல் முறை எமது நாடக அரங்கக் களப்பயிற்சிகளில் கையாளப்பட்டு வரும் முறைமையாகவே இருக்கின்றது.

இத்தகைய கல்வியியல் அரங்கின் எண்ணக் கருவினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள் ளப்பட்டு வரும் நாடக அரங்கச் செயற்பாடுகளை ஆவணமாக்கி எழுத்தில் கொண்டுவர வேண்டியது காலத்தின் தேவையாகியுள்ளது.எழுத்தில் இருந்தாற்தான் அது வரலாற்றில் ஏற்கப்படும் காலம் இது.எனவே செயற்பாடுகளை எழுத்தில் ஆவணமாக்க வேண்டியது அவசர அவசியமாகி யுள்ளது. அதிலும் நகரிலிருந்து வெகு தூரத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளின் ஆவணப்படுத்தல் அவசியமானதாக உணரப்படும் இக்காலத்தில் களரியை வெளிக்கொணர்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**ஆலோசனையும் வழிகாட்டலும்**
கா.அருமைராசா,
அதிபர்.
**தொகுப்பாசிரியர்**
து.கௌரீஸ்வரன்,
ஆசிரியர், நாடகமும் அரங்கக் கலைகளும்.

## 2012 கல்குடா வலய சிறுவர் நாடக விழாவில் அரங்கேறிய கறுவாக்கேணி விக்னேஸ்வராவின் "குரங்குகளின் இராச்சியத்தில்"

கிழக்குமாகாண கல்வித்திணைக்களத்தின் ஆரம்பக் கல்விப் பிரிவினால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் சிறுவர் நாடகவிழாவில் 2012 இல் கல்குடா கல்வி வலய மட்டத்தில் மட்/கது/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் "குரங்குகளின் இராச்சியத்தில்"எனும் சிறுவர் நாடகம் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டு அரங்கேற்றப்பட்டது. 12.11.2012 ஆந் திகதி மட்/கது/வந்தாறுமூலை விஸ்ணு மகா வித்தியாலய மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சுபா சக்கரவர்த்தி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கல்குடா வலய சிறுவர் நாடக விழாவில் இந்நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது. இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு செ..ஸ்ரீகிருஸ்ணராஜா அவர்கள் வருகை தந்திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## சமாதான விழாக்களில் கறுவாக்கேணியின் நாடகங்கள்

கல்குடா வலயக் கல்வி அலுவலகம் giz நிறுவனத்தின் சமாதானக் கல்விப் பிரிவின் அனுசரணையில் சமாதான வாணி விழாவினை கடந்த 24.10.2012 ஆந் திகதி கல்குடா வலயக் கல்வி அலுவலக விரிவுரை மண்டபத்திலும், சமாதான ஒளி விழாவினை கடந்த 08.11.2012 ஆந் திகதி கல்குடா நாமகள் வித்தியாலய மண்டபத்திலும் மிகச் சிறப்பாக நடத்தியிருந்தது. இதில் பல பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சமாதானத்தை தொனிப் பொருளாகக் கொண்ட கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தன. இவற்றுள் வாணி விழாவில் கறுவாக்கேணி மாணவர்களின் "குரங்குகளின் இராச்சியத்தில்" எனும் சிறுவர் நாடகமும், ஒளிவிழாவில் "வாழ்வளித்த வளவன்" எனும் நாடகமும் ஆற்றுகைசெய்யப்பட்டிருந்தது. இந்த நாடகங்களின் ஆற்றுகைக்கான வாய்ப்பினை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.ஞானராஜா அவர்கள் வழங்கியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இலக்கிய மாநாட்டின் நாடக விழாவில் அரங்கேறிய கறுவாக்கேணியின் சிறுவர் நாடகங்கள்

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவின் மட்டக்களப்பு மாவட்ட நிகழ்வுகளின் ஓரம்சமாக நாடகவிழா கடந்த 15.10.2012 ஆந் திகதி கல்லடியிலுள்ள சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவக மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நாடக விழாவில் மட்/ககு/ கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் தரம் 7 இல் கல்விகற்ற சிறுவர்கள் பங்குபற்றிய "கரிக்குருவியின். முயற்சி"எனும் சிறுவர் நாடகமும், தரம் 4 இல் கல்வி கற்ற சிறுவர்கள் பங்குபற்றிய" குரங்குகளின் இராச்சியத்தில்..." எனும் சிறுவர் நாடகமும் ஆற்றுகை செய்யப்பட்டன. இவ்விழாவில் அதிதிகளாக கலந்துகொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களும், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களும் இச்சிறுவர் நாடகங்களைப் பாராட்டிக் கருத்துரைத்திருந்தார்கள்.





## பாடசாலை செல்லத் தூண்டும் பிரச்சார வீதிநாடகம் தயாரித்த மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம்

கல்குடா வலயத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக இருக்கின்ற பாடசாலைகள் இனங்காணப்பட்டு அப்பாடசாலைகள் உள்ள கிராமங்களில் பாடசாலைக் கல்வியின் அவசியத்தினை வலியுறுத்தும் வகையிலான வீதிநாடக பிரச்சார செயற்றிட்டம் கல்குடாவலய கல்வி அலுவலகத்தால் ஐ.நா சிறுவர் நிதியத்தின் அனுசரணையுடன் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வகையில் வாகனேரி, காயான்கேணி ஆகிய பிரதேசங்களில் பிரச்சாரத்தினை மேற்கொள்வதற்கான வீதிநாடகத்தினைத் தயாரிக்கும் வாய்ப்பு மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கிணங்கதரம் 11,12 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களின் பங்குபற்றுகையில் பள்ளிசெல்ல...எனும் தெருவெளி நாடகம் நாடக ஆசிரியரால் உருவாக்கப்பட்டது. இந்நாடகம் 07.11.2011 ஆந் திகதி வாகனேரி, இறாலோடை, காயான்கேணி ஆகிய ஊர்களில் நிகழ்த்தப்பட்டு ஆக்கபூர்வமான உரையாடல்களும் நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 2012 அரச சிறுவர் நாடக விழாவில் ஆற்றுகை செய்யப்பட்ட கறுவாக்கேணி விக்னேஸ்வராவின் "கரிக்குருவியின் முயற்சி" சிறுவர் நாடகக் காட்சிகள்






# கறுவாக்கேணி விக்னேஸ்வராவின் தமிழ் இன்னியம் (பண்பாட்டு இசையணி) உருவாக்கமும், வளர்ச்சியும், ஆற்றுகைகளும்



மட்/கல்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வரலாற்றில் முதல் முறையாக 2010 அக்டோபர் மாதம் தமிழ் இன்னியம் உருவாக்கப்பட்டது. கல்குடா கல்வி வலயத்தின் வாகரை மகா வித்தியாலயத்தில் 2010 அக்டோபர் மாதம் கல்வியமைச்சின் சமாதான கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட இரு நகர நண்பர்கள் (தெநுவரமித்துரோ) எனும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பண்டாரவளையிலிருந்து வருகைதந்த கல்வி அதிகாரிகளையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் வரவேற்கும் தமிழ் இன்னியத்தின் தேவையினை வலியுறுத்திய இந்நிகழ்வின் ஒழுங்கமைப்பாளரும் ஏறாவூர்ப் பற்று-2கோட்டக்கல்விப் பணிப்பாளருமாகிய திரு.அ.சுகுமார் அவர்களின் வேண்டுகோளையேற்று அதிபர் திரு.கா.அருமைராசா அவர்களின் மேலான ஒத்துழைப்புடன் மட்/கல்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத் தினால் இத்தமிழ் இன்னிய அணி உருவாக்கப்பட்டது.



மட்டக்களப்பு வடமோடி, கூத்தினுடைய சில தாளங்களும், ஆட்டக் கோலங்களும், வசந்தன் கூத்தின் தாளச் சொற்கட்டுக்களும், மட்டக்களப்பு பத்ததிக் கோவில் சடங்குகளில் ஊர்வலத்திற்காக அடிக்கப்படும் பறைத் தாளமும் ஒன்றிணைக்கப்பட மத்தளம், பறை, உடுக்கு, சல்லாரி, சிலம்பு, காற்சதங்கை, சங்கு முதலிய சுதேச இசைக் கருவிகளின் பயன்படுத்துகையுடன் இவ்வின்னிய அணி நாடகப் பாட ஆசிரியரால் உருவாக்கப்பட்டதுடன் இதற்கான ஆடை வடிவமைப்பு பிரபல ஓவியரும் ஆசிரியருமான சு.நிர்மலவாசன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வின்னிய அணியினைப் பார்வையிட்ட மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான திரு.சீ.யோகேஸ்வரன் அவர்கள் மேலும் இசைக் கருவிகளை இணைத்துக் கொள்வதற்காக அவரது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ஐம்பதாயிரம் இலங்கை ரூபாயினை வழங்கியுள்ளார். இதனூடாக பாடசாலைக்கென்று மத்தளம், பறை வாத்தியங்களுடன் இதில் பங்குபற்றும் ஆற்றுகையாளர்களுக்கான காற்சதங்கைகளையும் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

இவ்வின்னிய அணியினை இன்னும் பல்வேறு நுட்பங்களுடன் மெருகேற்றி முன்னெடுக்கும் திட்டங்கள் இருக்கின்றன இவற்றைச் செய்வதற்கு நிதி வசதிகள் தேவையாக உள்ளதனால் அவ்வப்போது கிடைக்கும் வளங்களைக் கொண்டு இவ்வணி மேலும் வளர்க்கப்பட்டு வருகின்றது.

**இவ்வின்னிய அணியினரின் ஆற்றுகைகள் பின்வரும் நிகழ்வுகளில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

| | | |
|---|---|---|
| 01. | 2010.10.05 | தெநுவரமித்துரோ,மட்/வாகரை ம.வி, |
| 02. | 2010.10.08 | தெநுவரமித்துரோ,மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம், |
| 03. | 2010.12.12 | கிழக்கு மாகாண சிறுவர் விழா,காத்தான்குடி. |
| 04. | 2011.03.03 | முத்தமிழ் விழா கோ.பற்று, பேத்தாழை |
| 05. | 2011.04.30 | இல்ல விளையாட்டு விழா, மட்/ கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| 06. | 2011.06.18 | கண்ணகி இலக்கிய விழா,மட்டுநகர். |
| 07. | 2011.06.21 | தெநுவரமித்துரோ அதிபர்கள் வரவேற்பு, கறுவாக்கேணி |
| 08. | 2011.07.01 | பொது நிருவாக அமைச்சரின் வருகை, மாவட்டச் செயலகம், |
| 09. | 2011.07.30 | வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத் திறப்பு விழா, |
| 10. | 2011.09.25 | மக்கள் கலை இலக்கிய விழா, வந்தாறுமூலை |
| 11. | 2011. | கல்குடா வலய அழகியல் தின விழா, சித்தாண்டி |
| 12. | 2011.11.16 | கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவம், கறுவாக்கேணி, |
| 13. | 2011.12.10 | நூலகத் திறப்பு விழா,பேத்தாழை. |
| 14. | 2012.03.13 | கோ.பற்று கோட்டமட்ட விளையாட்டு விழா கறுவாக்கேணி |
| 15. | 2012 | மாவட்ட விளையாட்டு விழா வாகரை |
| 16. | 2013.03.28 | இல்ல விளையாட்டு விழா கறுவாக்கேணி |
| 17. | 2013.05.07 | கல்குடா வலய விளையாட்டு விழா, சித்தாண்டி |

